குன்றத்தூர் நகராட்சி

நாள்.09.01.2026

**கூட்டம் எண்.1/2026**

**சாதாரணக் கூட்டம்**

குன்றத்தூர் நகராட்சியின் ஜனவரி-2026ம் மாதத்திற்கான சாதாரணக்கூட்டம் 09.01.2026ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

குன்றத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர், நவம்பர், டிசம்பர்-2025 மாதத்திற்கான தினசரி நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.971 நாள்.09.01.2026**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

குன்றத்தூர் நகராட்சியின் அக்டோபர், நவம்பர், டிசம்பர்-2025ம் மாதத்திற்கான பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவைகள் |
|---|---|---|---|
| அக்டோபர்-2025 | - | 24 | - |
| நவம்பர்-2025 | - | 32 | - |
| டிசம்பர் | - | 32 | - |

**தீர்மானம் எண்.972 நாள்.09.01.2026**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

குன்றத்தூர் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் கேட்பு, வசூல், நிலுவைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| வரியினம் | கேட்பு ரூ (லட்சத்தில்) | வசூல் ரூ.(லட்சத்தில்) | நிலுவை ரூ.(லட்சத்தில்) |
|---|---|---|---|
| சொத்துவரி | 642.15 | 393.92 | 248.23 |
| காலியிட வரி | 219.85 | 122.33 | 97.52 |
| தொழில்வரி | 43.96 | 20.77 | 23.19 |
| குடிநீர் கட்டணம் | 50.14 | 18.52 | 31.62 |
| வரியில்லா இனம் | 5.90 | 2.87 | 3.03 |
| திடக்கழிவு மேலாண்மை வரி | 106.08 | 46.21 | 59.87 |

**தீர்மானம் எண்.973 நாள்.09.01.2026**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.4**

குன்றத்தூர் நகராட்சியின் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர்-2025ம் மாத செலவுசீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| அக்டோபர் -2025 | - | செ செ.சீ.எண்.429 முதல் 491 வரை - பொதுநிதி மற்றும் திட்டநிதி |
| | | செ.சீ.எண்.96 முதல் 102 வரை - குடிநீர் விநியோகம் |
| நவம்பர் -2025 | - | செ.சீ.எண்.492 முதல் 572 வரை - பொதுநிதி மற்றும் திட்டநிதி |
| | | செ.சீ.எண்.104 முதல் 113 வரை - குடிநீர் விநியோகம் |
| டிசம்பர் -2025 | - | செ.சீ.எண்.573 முதல் 635 வரை - பொதுநிதி மற்றும் திட்டநிதி |
| | | செ.சீ.எண்.114 முதல் 130 வரை - குடிநீர் விநியோகம் |

**தீர்மானம் எண்.974 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.5**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 12.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை தொடர்ந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | கோதண்டம் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 800000 | ரமேஷ் ஏஜென்சி | குறைவு |
| | | | எழிலரசி | அதிகம் |
| 2 | நத்தம் அம்மன் கோயில் தெரு மெயின்ரோடு சிமெண்ட் சாலை அமைத்தல் | 2000000 | எழிலரசி | குறைவு |
| | | | ரமேஷ் ஏஜென்சி | அதிகம் |
| 3 | பெருமாள் கோயில் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல். | 1100000 | ரமேஷ் ஏஜென்சி | குறைவு |
| | | | எழிலரசி | அதிகம் |
| 4 | நத்தம் பகுதியில் சலவை தொழிலாளர்களுக்கு நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல். | 2000000 | ரமேஷ் ஏஜென்சி | குறைவு |
| | | | எழிலரசி | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு -</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1128/2025/இ1)

**தீர்மானம் எண்.975 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.6

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும திறந்தவெளி மேம்பாட்டு நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 12.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை தொடர்ந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட 15 பூங்காக்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 2000000 | Alfa Builder | குறைவு |
| | | | G.கார்த்திகேயன் | அதிகம் |
| 2 | ஸ்ரீ தேவகி நகர் பூங்கா சுற்றுச்சுவர் அமைத்தல் | 2000000 | ரமேஷ் ஏஜென்சி | குறைவு |
| | | | எழிலரசி | அதிகம் |

**அலுவலக குறிப்பு -**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1128/2025/இ1)**

**தீர்மானம் எண்.976 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.7</u>**

குன்றத்தூர் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023-24, 2024-25 மற்றும் 2025-26ம் ஆண்டு (Tied Grant)ன் கீழ் பணிகள் மேற்கொள்ள 17.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை தொடர்ந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை லட்சத்தில் | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | ராஜகணபதி நகர் 1வது வலது தெரு-179017L039, ராஜகணபதி நகர்-1790175155, ராஜகணபதி நகர் 3வது வலது தெரு-1790175135, கோதண்டம் தெரு தேவேந்திரன் நகர்-179017R206, குருவாயூரப்பன் நகர் -179017L042, ராஜகணபதி நகர் மெயின் ரோடு-179017R190, குருவாயூரப்பன் நகர் 1வது இடது தெரு-179017L037 மற்றும் குருவாயூரப்பன் நகர் குறுக்கு தெரு-179017R215 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 130.69 | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | M.கார்த்திக் | அதிகம் |
| 2 | மேத்தா நகர் பகுதியில் 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுதல். | 150.00 | N.V.B & Co | குறைவு |
| | | | SRT Infrastructure | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு -</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1571/2025/இ1)

**தீர்மானம் எண்.977 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.8

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருநாகேஸ்வரம் பகுதியில் (மாநில நெடுஞ்சாலைக்கு அருகில்) சர்வே எண்.70-ல் 1.59 ஏக்கர் பரப்பளவில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கட்டுப்பாட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய (உடற்பயிற்சி கூடம், சிறுவர் விளையாட்டு கூடம், திறந்தவெளி அரங்கம், யோகா செய்யும் இடம் மற்றும் இதர வசதிகள்) பூங்காவை குன்றத்தூர் நகராட்சியில் கட்டுப்பாட்டில் ஒப்படைப்பு செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ள வரப்பெற்றுள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும உதவிப் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் (Division 1. C.W., Circle – 1, CMDA, Chennai – 107) அவர்களால் 22.12.2025 தேதியில் கையொப்பமிடப்பட்டு வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.4622/2025/எப்1)

**தீர்மானம் எண்.978 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.9

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டிற்கான (01.09.2025 முதல் 31.03.2026 வரை) நவீன கட்டண கழிப்பிடம், வசூலிக்கும் குத்தகை உரிமத்திற்காக ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் குறித்த அறிவிக்கையினை நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பின்வரம் விவரப்படி M/s.Enthrall Communications Pvt Ltd என்ற விளம்பர நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | விவரம் | நிறுவனத்தின் பெயர் | விளம்பரம் வெளியிட்ட நாளிதழ் / நாள் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | நவீன கட்டணக் கழிப்பிடம் வசூலிக்கும் உரிமை (01.09.2025 முதல் 31.03.2026 வரை) | M/s.Enthrall Communications Pvt Ltd., Chennai – 600030 | தினமணி, சென்னை / 15.08.2025 | PB/00352/25-26 நாள்.16.08.2025 | 15173/- |

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.751/2025/அ1)

**தீர்மானம் எண்.979 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.10**

குன்றத்தூர் நகராட்சியின் நகரமன்ற தலைவர் பயன்பாட்டிற்கான ஸ்கார்பியோ வாகனம் எண்.TN 85 R 0222-க்கு பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு M/s.Marudhar Mishri Motors LLP, சென்னை – 600056 நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து வாகனம் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணி முடிக்கப்பட்டமைக்கு கீழ்க்காணும் விவரப்படி பட்டியல் வரப்பெற்றது.

| வ. எண் | விவரம் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நகரமன்ற தலைவர் பயன்பாட்டிற்கான ஸ்கார்பியோ வாகனம் எண்.TN 85 R 0222 பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணி | M/s.Marudhar Mishri Motors LLP | RO26A016716 / 02.12.2025 | 72178/- |

மேற்காணும் விவரப்படி நகரமன்ற தலைவர் பயன்பாட்டிற்கான ஸ்கார்பியோ வாகனம் பழுதுநீக்கம் செய்தமைக்கு அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று M/s.Marudhar Mishri Motors LLP, சென்னை-600056 நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.72178/- வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.980 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.11**

தமிழ்நாடு பூங்கா, விளையாட்டு திடல் மற்றும் திறந்தவெளியிடம் (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1959-ன்படி, குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தில் அனுமதி பெறப்பட்ட மனைப்பிரிவில் உள்ள பூங்காக்கள், விளையாட்டுதிடல் மற்றும் திறந்த வெளியிடங்கள் மொத்தம் 60 எண்ணிக்கையில் உள்ளது. மேற்படி பூங்காக்கள், விளையாட்டுதிடல் மற்றும் திறந்த வெளியிடங்களின் பட்டியலை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட தெரிவிக்கப்பட்டு வரப்பெற்றுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.5094/2022/TP2 நாள்.08.03.2022 மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

குன்றத்தூர் நகராட்சியில் மொத்தம் 60 எண்ணிக்கை பூங்காக்கள் உள்ளது. மேற்கண்ட இடங்கள் யாவும் பூங்கா பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1959-ன்படி தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்ய வேண்டும். மேற்படி பிரசுரம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்.5094/2022/TP2 நாள்.08.03.2022-ன்படி தயார் செய்த பட்டியலை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்.3915/2025/எப்1)**

**தீர்மானம் எண்.981 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.12**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்.510/1B1B-ல் அடங்கிய 970 சதுர மீட்டர் (0.24 ஏக்கர்) பரப்பளவில் 8 மனைகளுக்கு மனை உட்பிரிவு செய்ய திரு.Bரமேஷ், எண்.50, திருவேங்கடம் நகர், மேற்கு தாம்பரம், சென்னை – 600045 என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடித எண்.CMDA/PP/Layout-1/0341/2024 நாள்.05.12.2025ன்படி அங்கீகரிக்கப்பட்டு மேற்படி நில அளவை எண்ணில் 8 எண்ணிக்கை மனைகளாக மனைஉட்பிரிவு செய்து திட்ட அனுமதி எண்.PPD/LO.No.OL-02404 நாள்.05.12.2025ன்படி இறுதி ஒப்புதலுக்கு வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.4576/2025/எப்1)**

**தீர்மானம் எண்.982 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.13**

குன்றத்தூர் நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் தொடர்பாகவும் மற்றும் வார்டு அளவிலான சிறப்பு கூட்டம் நடைபெறுவது தொடர்பாக நாளிதழிகளில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்காணும் விவரப்படி விளம்பர நிறுவனங்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றது.

| வ. எண். | விவரம் | நிறுவனத்தின் பெயர் | விளம்பரம் வெளியிட்ட நாளிதழ் / நாள் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | குன்றத்தூர் நகராட்சி 2024-2025ம் ஆண்டு திட்டப்பணிகள் குறித்த விளம்பரம் | The Daily Thanthi, Chennai – 600007 | தினத்தந்தி, சென்னை / 01.10.2025 | 2526CNI11541882 / 01.10/2025 | 95287.50 |
| 2 | குன்றத்தூர் நகராட்சியின் திட்டப்பணிகள் குறித்து தீபாவளி மலரில் விளம்பரம் | KAL Publications (P) Ltd, Chennai – 600004 | தினகரன், தமிழ் முரசு | 3300582664 / 17.10.2025 | 18000.16 |
| 3 | வார்டு அளவிலான சிறப்புக்கூட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிப்பு விளம்பரம் | The Daily Thanthi, Chennai – 600007 | தினத்தந்தி, சென்னை / 26.10.2025 | 2526CNI111548053 / 26.10.2025 | 11907.00 |

மேற்காணும் விவரப்படி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விளம்பர நிறுவனங்களுக்கு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1128/2025/இ1)**

**தீர்மானம் எண்.983 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.14</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்.353/1 மற்றும் PPD/LO No.105/22ன்படி அங்கீகரிக்கப்பட்ட நில அளவை எண்.352/2B1A1Apt-ல் அடங்கிய மனை எண்.8pt உள்ளடக்கிய 2799 சதுர மீட்டர் (0.69 ஏக்கர்) பரப்பளவில் 21 மனைகளுக்கான குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.K.சாந்தகுமார் மற்றும் பலர், எண்.5/10-16, செவன் வெல்ஸ் தெரு, செயின்ட் தாமஸ் மவுண்ட், சென்னை – 600016 என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணபிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடித எண்.CMDA/PP/Layout-1/0348/2024 நாள்.18.12.2025ன்படி அங்கீகரிக்கப்பட்டு மேற்படி நில அளவை எண்ணில் 21 எண்ணிக்கை மனைகளாக மனைப்பிரிவு செய்து திட்ட அனுமதி எண்.PPD/LO.No.OL-02447 நாள்.18.12.2025ன்படி இறுதி ஒப்புதலுக்கு வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.4624/2025/எப்1)**

**தீர்மானம் எண்.984 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.15**

அரசாணை (நிலை) எண்.324 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.17.10.2025 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.24470/2019/எம்.ஏ2 நாள்.18.10.2025 ஆகியவற்றில் மாநகராட்சி / நகராட்சிப் பகுதி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகளை மேம்படுத்திட அப்பகுதி மாமன்ற / நகர்மன்ற உறுப்பினர் தலைமையில் மாநகராட்சி / நகராட்சி அலுவலர் ஒருவரை கூட்டுநராக கொண்டு அவ்வார்டு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்கும் வகையில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சிறப்புக் கூட்டங்களை 27.10.2025, 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தினங்களில் ஏதேனும் ஒரு நாளில் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து, முன்னுரிமை அடிப்படையில் ஏதேனும் மூன்று (3) கோரிக்கைகள் மட்டும் செயல்படுத்தும் விதமாக கோரிக்கைகள் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி குன்றத்தூர் நகராட்சியில் 1 முதல் 30 வார்டுகளில் 27.10.2025, 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தினங்களில் சிறப்பு கூட்டங்களை நடத்த வேண்டியுள்ளதால் பொதுமக்களின் வசதிக்காக நிழற்குடை, பந்தல், சேர், டேபிள் மற்றும் இதர அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்ள அவசர அவசியத்தினை முன்னிட்டு 24.10.2025 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | Description of Work | Rate Quoted By M/s.Sankaran Audio | Rate Quoted By M/s.Siva Furnitures | Rate Quoted By M/s.Subam Chamiyana |
|---|---|---|---|---|
| 1 | Providing Chamiyana Arrangements to camp centre, Chairs, Tables and Side Screen including cost of transportation, and all other labour charges etc., complete | ரூ.29900/- குறைவு | ரூ.35500/- அதிகம் | ரூ.41500/- அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.சங்கரன் ஆடியோ நிறுவனத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி புதிய சட்டம் 2023 பிரிவு 57(7)ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து பணி முடிக்கப்பட்டமைக்கு பட்டியல் தொகை ரூ.29900/- வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2538/2022/இ1)

**தீர்மானம் எண்.985 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.16**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் அ கிராமம், நில அளவை எண்.817/2-ல் அடங்கிய 2350 சதுர மீட்டர் (0.58 ஏக்கர்) பரப்பளவில் 16 மனைகளுக்கான குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.V.ஹரிஹரன், எண்.18, சன்னதி தெரு, அனகாபுத்தூர், சென்னை – 600070 என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடித எண்.CMDA/PP/Layout-1/0169/2025 நாள்.08.08.2025ன்படி அங்கீகரிக்கப்பட்டு மேற்படி நில அளவை எண்ணில் 16 எண்ணிக்கை மனைகளாக மனைப்பிரிவு செய்து திட்ட அனுமதி எண்.PPD/LO.No.OL-02039 நாள்.08.08.2025ன்படி இறுதி ஒப்புதலுக்கு வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2862/2025/எப்1)

**தீர்மானம் எண்.986 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.17**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.33553/2022/இஏ1 நாள்.23.10.2024ன்படி குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை வெளிக்கொணர்வு மூலம், தனியார் சேவை வழங்குநர்/ நிறுவனம்/ ஒப்பந்ததாரர் ஆகியோர் மூலம் மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 படி ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கண்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டதன் தொடர்ச்சியாக இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை ந.க.எண்.2056/2024/இ1 நாள்.25.10.2024ன்படி 14.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியான ஒப்பந்ததாரராக கே.ஆர்.எஸ். சர்வீஸ், சென்னை, என்ற நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு, நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி ந.க.எண்.2056/2024/எச்1 நாள்.29.11.2024ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 01.12.2024 முதல் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கான் நகராட்சி நிருவாக இயக்குநரின் செயல்முறை ஆணையில் தெரிவு செய்யப்படும் தனியார் சேவை வழங்குநரின் ஒப்பந்தகாலம் ஒரு ஆண்டு எனவும், திட்ட செயலாக்கத்தினை மறு மதிப்பீடு செய்து தொடர்ச்சியாக மூன்ற ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சியில் மேற்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வரும் நிறுவனமான கே.ஆர்.எஸ், சர்வீஸ், சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 30.11.2025 உடன் முடிவடைகிறது. மேலும் சுகாதார பணியானது பொதுமக்களின் அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோர போதுமான கால அவகாசம் இல்லாத காரணத்தாலும் ஏற்கனவே பணி மேற்கொள்ளும் கே.ஆர்.எஸ் சர்வீஸ் நிறுவனத்தின் மூலம் டிசம்பர்-2025 முதல் மார்ச்-2026 வரை பொதுசுகாதாரபணிகள் தொய்வின்றி நடைபெறும் பொருட்டு ஒப்பந்த காலத்தினை, ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்த விலை விகிதத்தில் பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு வழங்கவும் மற்றும் பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் முன்அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 01.12.2024 முதல் 30.11.2025 வரை திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டதின் அடிப்படையில் டிசம்பர்-2025 முதல் மார்ச்-2026 வரையிலான மாதங்களுக்கு 10% கூடுதலாக செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>: அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) திடக்கழிவு மேலாண்மை திட்ட அவசர அவசியம் கருதி கால நீட்டிப்பு செய்யவும் மற்றும்10% கூடுதலாக செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2056/2024/எச்1)

**தீர்மானம் எண்.987 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.18</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12199/ஆர்1/2025ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.480, நாள்.16.12.2025-ஐ அடிப்படையாக கொண்டு தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு அறிவிக்கை எண்.836 நாள்.16.12.2025ன்படி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023-ல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சொத்துவரி பெயர் மாற்றக் கட்டணத்தினை பின்வருமாறு நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்**

1. குடியிருப்பு பயன்பாடு (ரூபாயில்) - 500/-
2. பிறபயன்பாடு (ரூபாயில்) - 1000/-

மேற்கண்டவாறு சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு கட்டணங்கள் வசூலிக்கவும், நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண்.256 (3) (4) உட்பிரிவுகளில் சொத்துவரி பெயர்மாற்றம் மற்றும் கால வரையரை குறித்து விவரிக்கப்பட்டுள்ளதன்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் குடிநீர் கட்டணம் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு எண்களுக்கு பெயர் மாற்ற கட்டணம் ஏதும் இல்லை என நிர்ணயம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.3991/2025/அ1)**

**தீர்மானம் எண்.988 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.19</u>**

குன்றத்தூர் நகராட்சியில் 31.03.2026 உடன் முடிவடையும் 2025-2026ம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் தயார் செய்யவும் மற்றும் தற்போது 2024-2025ம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற உள்ளதால் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு கணக்குகள் தயார் செய்யவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று M/s.RMS Account Consultant என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும், மேற்காணும் பணிக்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1128/2025/பி1)**

**தீர்மானம் எண்.989 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.20</u>**

தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் அரசு செயலாளர், பொது (தேர்தல்) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600009 அவர்களின் கடிதம் எண்.3200/Ele-I/2024-26 நாள்.19.12.2025-ல் தமிழகத்தில் 2026ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி மையங்களில் குறைந்தபட்ச வசதிகள், பிற அடிப்படை வசதிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான வசதிகள் குறித்து தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி குன்றத்தூர் நகராட்சியில் தற்போதுள்ள 52 வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர், கழிப்பறைகள், மின்சார வசதி, பிற அடிப்படை வசதிகள் அமைத்தல் மற்றும் வாக்குச்சாவடி வரைபடங்கள் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.10.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு –</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.1128/2025/இ1)**

**தீர்மானம் எண்.990 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.21**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகர் (ம) வட்டம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 31.12.2025 புதன்கிழமை மற்றும் 01.01.2026 வியாழக்கிழமை அன்று ஆங்கில புத்தாண்டினை முன்னிட்டு பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகை புரிவதால் திருக்கோயில் நலன் மற்றும் பக்தர்கள் நலன்கருதி திருக்கோயிலை சுத்தம் செய்தும், குப்பைகளை அகற்றி தருவதற்கு நகராட்சி தூய்மை பணியாளர்களை அனுப்பி வைக்கவும், மேலும் தற்காலிக கழிவறை, குடிநீர் வசதிகள் ஏற்படுத்தி தரக்கோரி செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | விவரம் | Rate Quoted By M/s.SK SAnitaz | Rate Quoted By M/s.LEO Polymers Enterprises | Rate Quoted By M/s.Gloobal Sanitas Services |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 31.12.2025 புதன்கிழமை மற்றும் 01.01.2026 வியாழக்கிழமை அன்று ஆங்கில புத்தாண்டினை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக நடமாடும் கழிப்பறை (Mobile Toilet) அமைத்தல் | ரூ.31860/- குறைவு | ரூ.33040/- அதிகம் | ரூ.33748/- அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.SK Sanitaz நிறுவனத்திற்கு அவசர அவசித்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை தொடர்ந்து 31.12.2025 மற்றும் 01.01.2026 தேதிகளில் குன்றத்தூர் நகராட்சி சார்பாக நடமாடும் கழிவறை வசதிகள் ஏற்படுத்தி தந்தமைக்கு M/s.SK Sanitaz நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.31860/- பொதுநிதியில் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு -**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.991 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.22**

தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் அரசு செயலாளர், பொது (தேர்தல்) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600009 அவர்களின் கடிதம் எண்.3200/Ele-I/2024-26 நாள்.19.12.2025-ல் தமிழகத்தில் 2026ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி மையங்களில் குறைந்தபட்ச வசதிகள், பிற அடிப்படை வசதிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான வசதிகள் குறித்து தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி குன்றத்தூர் நகராட்சியில் தற்போதுள்ள 52 வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வு தளங்கள், மூத்த குடிமக்கள் வாக்களிப்பதற்கான வசதிகள் மற்றும் பிற அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.10.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.992 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.23**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் அ கிராமம், நில அளவை எண்கள்.1067 & 1068-ல் அடங்கிய 9874 சதுர மீட்டர் (2.44 ஏக்கர்) பரப்பளவில் 78 மனைகளுக்கான குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க M/s.Urban Tree Green Homes LLp, No.8, Rutland Gate, 5th Street, Nungambakkam, Chennai – 600006 என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடித எண்.CMDA/PP/Layout-1/0397/2024 நாள்.19.06.2025ன்படி அங்கீகரிக்கப்பட்டு மேற்படி நில அளவை எண்ணில் 78 எண்ணிக்கை மனைகளாக மனைப்பிரிவு செய்து திட்ட அனுமதி எண்.PPD/LO.No.OL-0124 நாள்.19.06.2025ன்படி இறுதி ஒப்புதலுக்கு வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2862/2025/எப்1)

**தீர்மானம் எண்.993 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.24**

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை (ம) முதன்மை பிறப்பு இறப்பு பதிவாளர் அவர்களின் கடித ந.க.எண்.12308361/மா.சு.பு.மை.1/இரு.1/2025 நாள்.15.12.2025-ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட ஆரம்ப சுகாதாரம் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு 01.01.2026 முதல் திருத்தப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் இதர படிவங்கள் அரசு பரிந்துரைக்கப்பட்டுள்ள மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கு தோராய செலவினம் ரூ.2,00,000/-த்திற்கு நகர் மன்ற பொருள் வைத்து நகர் மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உரிய நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.994 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.25**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பின்வரும் விவரப்படியான குடிநீர் பணிகள் மேற்கொள்ளும் பணி டிசம்பர்-2025 உடன் முடிவடைவதால் ஜனவரி முதல் மார்ச்-2026 வரையிலான காலங்களுக்கு ஏற்கனவே பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | இடத்தின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரை 2025-2026 ஆண்டிற்கு ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச்-2026ம் மாதங்களுக்கு குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் நீட்டிப்பு செய்தல் | 8.00 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் |
| 2 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 20 வரை 2025-2026 ஆண்டிற்கு ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச்-2026ம் மாதங்களுக்கு குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் நீட்டிப்பு செய்தல் | 8.00 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் |
| 3 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 முதல் 30 வரை2025-2026 ஆண்டிற்கு ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச்-2026ம் மாதங்களுக்கு குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் நீட்டிப்பு செய்தல் | 8.00 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் |
| 4 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரை 2025-2026 ஆண்டிற்கு ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச்-2026ம் மாதங்களுக்கு திரவக் குளோரின் சப்ளை செய்யும் பணி நீட்டிப்பு செய்தல் | 7.50 | Om Prabancha Enterprises |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.995 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.26</u>**

குன்றத்தூர் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் மற்றும் பிற தொற்றுநோய் பரவுவதை தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.250/இ5/2022 நாள்.01.09.2022ன் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தற்காலிக DBC பணியாளர்கள் 50 எண்ணிக்கையில் அமர்த்தி டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணியின் அவசியம் கருதி ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும் KRS நிறுவனத்தின் மூலம் 01.11.2025 முதல் 31.12.2025 வரை இரண்டு மாதங்களுக்கு தனியார் நிறுவனத்தின் மூலம் டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணிகள் மேற்கொள்ள குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.958 நாள்.17.10.2025ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்காலம் 31.12.2025 உடன் முடிவடைவதால் டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணியின் அவசியம் கருதி 01.01.2026 முதல் 31.03.2026 வரை மூன்று மாதத்திற்கு பணி நீட்டிப்பு செய்து KRS Service நிறுவனத்தின் மூலம் டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணியினை மேற்கொள்ளவும், மற்றும் பொதுநிதியிலிருந்து பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் முன்அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.197/2023/எச்1)

**தீர்மானம் எண்.996 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

பொருள் எண்.27

குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பின்வரும் விவரப்படியான வரிசை எண்.1 முதல் 28 வரையுள்ள குடிநீர் இணைப்பு எண்கள் துண்டிப்பு செய்யப்பட்ட நிலையில் நாளது வரை UTIS-ல் குடிநீர் கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. எனவே மேற்படி குடிநீர் இணைப்புகளை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | குடிநீர் இணைப்பு எண் | பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 179/001/900075 | முனியம்மாள் | 9900 |
| 2 | 179/001/900014 | காஞ்சனா | 9300 |
| 3 | 179/001/900069 | தெய்வசிகாமணி | 600 |
| 4 | 179/004/900006 | முபாரக் பாஷா | 7200 |
| 5 | 179/008/900209 | ஸ்ரீராமன் | 9900 |
| 6 | 179/008/900031 | அப்துல்கரீம் | 7200 |
| 7 | 179/009/900053 | மீனா | 9900 |
| 8 | 179/015/900044 | சாந்தி | 9900 |
| 9 | 179/015/900072 | பொன்னம்மாள் | 9900 |
| 10 | 179/019/900061 | சங்கர் | 9900 |
| 11 | 179/019/900075 | லட்சுமி | 9900 |
| 12 | 179/026/900026 | C.உமாமகேஸ்வரி | 9900 |
| 13 | 179/026/900027 | சேகர் | 8700 |
| 14 | 179/026/900025 | சீதாராமன் | 9500 |
| 15 | 179/026/900054 | விநாயகம் | 9300 |
| 16 | 179/026/900041 | கஸ்தூரி | 9900 |
| 17 | 179/026/900050 | சூர்யகலா | 8000 |
| 18 | 179/027/900009 | சீனிவாசன் | 8300 |
| 19 | 179/027/900002 | P.திருநீலகண்டன் | 7000 |
| 20 | 179/029/900011 | மணி | 9300 |
| 21 | 179/023/900022 | உண்ணாமலை | 9300 |
| 22 | 179/023/900004 | கோவிந்தம்மாள் | 9300 |
| 23 | 179/023/900089 | R.குணசுந்தரி | 9300 |

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.997 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.28**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் புகார்கள் தொடர்பாக நாளிதழ்களில் வரப்பெறும் செய்திகளை உடனுக்குடன் சரிசெய்யவும். மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கு ஜூன்-2025 முதல் டிசம்பர்-2025 வரை தினத்தந்தி, தினமலர் மற்றும் தினகரன் நாளிதழ்கள் சப்ளை செய்தமைக்கும் மற்றும் அறிவுசார் மையத்திற்கு ஜூன்-2025 முதல் டிசம்பர்-2025 வரை தினகரன், தி இந்து (தமிழ்), தினமணி நாளிதழ்கள் சப்ளை செய்தமைக்கும் மேற்படி நாளிதழ்களின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s.Vasu Newspaper Agency உரிமையாளர் திரு.S.கோபிநாத், தினத்தந்தி முகவர், குன்றத்தூர் என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.14000/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.998 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.29**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பின்வரம் விவரப்படியான குடிநீர் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு .

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ.(லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரை 2026-2027 ஆண்டிற்கான குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 19.90 |
| 2 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 20 வரை 2026-2027 ஆண்டிற்கான குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 19.90 |
| 3 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 முதல் 30 வரை 2026-2027 ஆண்டிற்கான குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 19.90 |
| 4 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 15 வரை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு 2026-2027ம் ஆண்டிற்கு திரவ குளோரின் சப்ளை செய்தல் | 14.00 |
| 5 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 முதல் 30 வரை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு 2026-2027ம் ஆண்டிற்கு திரவ குளோரின் சப்ளை செய்தல் | 14.00 |
| 6 | திருமலை நகர், RMP நகர், மணிகண்டன் நகர், பல்லாவரம் மெயின் ரோடு, துலுக்கத்தெரு, ஐஸ்வர்யம் நகர், ஹரி அவென்யூ, ஒண்டிக்காலனி மற்றும் குடுமி தெரு ஆகிய பகுதிகளில் புதியதாக 3" PVC குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 3.00 |
| 7 | பேருந்து நிலையம், நத்தம் கொல்லைத்தெரு, லட்சுமி நகர், அங்காள பரமேஸ்வரி நகர், ராஜேஸ்வரி நகர், பொன்னியம்மன் கோவில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆகிய இடங்களில் பழுதடைந்த மின்மோட்டர்களை அகற்றி புதிய மின்மோட்டார் பொருத்தும் பணி | 7.10 |
| 8 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையிலான பகுதிகளுக்கு 5HP மற்றும் 2HP மோட்டார் பம்பு மற்றும் பேனல் போர்டு கொள்முதல் செய்தல் | 13.00 |
| 9 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையிலான பகுதிகளில் உள்ள மின்மோட்டார்களை இயக்க பயன்படும் EB பாக்ஸ், Kisok பாக்ஸ் பழுதடைந்ததை அகற்றி புதியதாக பொருத்துதல் | 6.00 |
| 10 | மெட்ரோ ஹைடெக் ரெசிடன்சி அம்பேத்கார் பூங்கா, தேவகி நகர் அப்துல் கலாம் பூங்கா மற்றும் மணிகண்டன் நகர் வள்ளலார் பூங்கா ஆகிய இடங்களில் உள்ள மினிபவர் பம்ப் பழுதடைந்ததை அகற்றி புதியதாக மாற்றியமைத்தல் | 4.50 |

| | | |
|---|---|---|
| 11 | மேத்தா நகர் 8வது மேற்கு தெரு, 18வது மேற்கு தெரு, 5வது கிழக்கு தெரு, 5வது மேற்கு தெரு ஆகிய இடங்களில் உள்ள மூடியுடன் கூடிய உறை கிணற்றில் தூர்வாரும் பணி மேற்கொள்ளுதல் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 4.80 |
| 12 | மோகலிங்கம் நகர், சேக்கிழார் நகர், கரைமாநகர், பெரியார் நகர் மற்றும் பேருந்து நிலைய நவீன கட்டண கழிப்பிடம் ஆகிய இடங்களில் பழுதடைந்த மினி பவர் பம்பினை அகற்றி புதியதாக மாற்றி அமைக்கும் பணி | 7.20 |
| 13 | சம்மந்தம் நகர் பூங்கா பகுதியில் புதியதாக மூடியுடன் கூடிய உறை கிணறு மற்றும் மின்மோட்டார் EB Box, கேபிள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 8.40 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.999 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.30</u>

குன்றத்தூர் நகராட்சியின் 2025-2026ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/பி1)

**தீர்மானம் எண்.1000 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.31**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டுகளில் உள்ள பகுதிகளில் அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண்.28-ல் உள்ள தாய்சுந்தரம் நகரில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1000000 |
| 2 | அரசு மேல்நிலைப்பள்ளியில் கட்டப்படும் விழா மேடை அமைத்தல் பணிக்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல் | 1000000 |
| 3 | கொல்லை தெருவில் சமுதாயக் கூடத்திற்கு மின்விசிறி மற்றும் மின்விளக்குகள் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 500000 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/இ1)

## தீர்மானம் எண்.1001 நாள்.09.01.2026

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.32**

குன்றத்தூர் நகராட்சியின் 2026-2027ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை (Budget) தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/பி1)

## தீர்மானம் எண்.1002 நாள்.09.01.2026

**பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.33**

குன்றத்தூர் நகராட்சியின் 2025-2026ம் ஆண்டிற்கான மார்ச்-2026 உடன் முடிவடையும் காலத்திற்கு வரவு செலவு விவரங்கள் அடங்கிய ஆண்டு கணக்குகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/பி1)

## தீர்மானம் எண்.1003 நாள்.09.01.2026

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.34**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதி நிதியின் கீழ் கொசுமருந்து புகை அடிக்க பயன்படுத்தும் இயந்திரங்கள் பராமரித்தல் மற்றும் பழுதுநீக்கம் மேற்கொள்ளுதல் பணிக்கு 06.01.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை தொடர்ந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பொதுசுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சியில் கொசுமருந்து புகை அடிக்கப் பயன்படுத்தும் 5 எண்ணிக்கையிலான இயந்திரங்கள் (Big Fogging Machine – 2 & Small Machine -3) ஒரு வருடத்திற்கு பராமரித்தல் மற்றும் பழுதுநீக்கம் செய்தல். | 400000 | M/s.CRSD Enterprises | குறைவு |
| | | | M/s.Prince Engineering Works | அதிகம் |

**அலுவலக குறிப்பு -**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1128/2025/எச்1)

## தீர்மானம் எண்.1004 நாள்.09.01.2026

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.35</u>**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-26ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 12.06.2025 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குன்றத்தூர் நகராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பராமரிப்பு – 6 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் (01.07.2025 முதல் 31.03.2026 வரை) பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.950000/- ஜனவரி 2026ம் மாதத்துடன் முடிவடைவதால் பிப்ரவரி-2026 மற்றும் மார்ச்-2026ம் மாதங்களுக்கு மேற்காணும் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் M/s.KRS Service நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு -</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.1005 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.36</u>**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கீழ்காணும் விவரப்படியான பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.2ல் உள்ள நாவிதர் தெருவில் மழைநீர் வடிகாலுக்கு மேல்மூடி அமைத்தல் பணி | 450000 |
| 2 | வார்டு எண்.2ல் உள்ள பவானியம்மன் கோயில் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகாலுக்கு மேல்மூடி அமைத்தல் பணி | 2000000 |
| 3 | வார்டு எண்.3ல் உள்ள காமராஜ் நகர் முதல் தெரு சிமெண்ட் சாலை புதியதாக அமைத்தல் பணி | 1230000 |
| 4 | வார்டு எண்.4ல் உள்ள திருமூலர் சாலை மற்றும் கவிகம்பர் தெருவிற்கு புதியதாக மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 2000000 |
| 5 | வார்டு எண்.5ல் உள்ள திருமலை நகர் மற்றும் RMP நகர் விரிவில் புதியதாக மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 1300000 |
| 6 | வார்டு எண்.7ல் உள்ள பாலாஜி நகரில் புதியதாக மூடியுடன் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 2000000 |
| 7 | வார்டு எண்.12ல் உள்ள சேக்கிழார் தெரு, வள்ளாளர் தெரு, கங்கையம்மன் கோயில் வலது, கங்கையம்மன் தெரு இடது, கங்கையம்மன் கோயில் தெரு விரிவு மற்றும் குழாய் தெருவிற்கு மழைநீர் வடிகாலுக்கு மேல்மூடி அமைத்தல் பணி | 2000000 |
| 8 | வார்டு எண்.20ல் உள்ள மாணிக்கம் தெரு மற்றும் பள்ள தெருவிற்கு புதியதாக மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 1500000 |
| 9 | வார்டு எண்.22ல் மாசிலாமணி தெருவில் புதியதாக மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 2000000 |
| 10 | வார்டு எண்.27ல் பெருமாள் கோயில் தெருவில் அமைந்துள்ள டாக்டர்.அம்பேத்கர் விளையாட்டு திடலுக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 2000000 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/E1)

**தீர்மானம் எண்.1006 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.37</u>**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கீழ்காணும் விவரப்படியான பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1ல் உள்ள பொன்னியம்மன் கோயில் தெருவில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 1900000 |
| 2 | வார்டு எண்.3ல் உள்ள திருநீலகண்டர் தெரு, காரைக்கால் அம்மையார் தெரு, புகழ் சோழர் சாலையில் புதியதாக மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி மற்றும் திருநீலகண்டர் தெருவிற்கு மழைநீர் வடிகாலுக்கு மேல்மூடி அமைத்தல் பணி | 1300000 |
| 3 | வார்டு எண்.10ல் உள்ள சேரன் தெரு, சோழன் தெருவில் புதியதாக மூடியுடன் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 800000 |
| 4 | வார்டு எண்.11ல் உள்ள கன்னியப்பன் நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருவில் தார்சாலை புதுப்பித்தல் பணி | 2000000 |
| 5 | வார்டு எண்.16ல் உள்ள பிள்ளையார் கோயில் தெரு, பொன்னி நகர் 1வது தெரு, பொன்னி நகர் 2வது தெருவில் மழைநீர் வடிகாலுக்கு மேல்மூடி அமைத்தல் பணி | 2000000 |
| 6 | வார்டு எண்.20ல் உள்ள ஆத்து மேட்டு பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 2000000 |
| 7 | ஜெகநாதபுரம் 1வது குறுக்கு தெரு, ஜெகநாதபுரம் 2வது குறுக்கு தெரு, ஜெகநாதபுரம் 3வது குறுக்கு தெரு மற்றும் ஜெகநாதபுரம் 4வது குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை புதுப்பித்தல் | 2000000 |
| 8 | வார்டு எண்.27ல் உள்ள செல்லியம்மன் கோயில் தெரு மற்றும் குடுமி தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 420000 |
| 9 | வார்டு எண்.27ல் உள்ள தேவி நகர் 3வது தெருவில் புதியதாக மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 970000 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/E1)

**தீர்மானம் எண்.1007 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.38**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கீழ்காணும் விவரப்படியான பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 15 வார்டுகளில் பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் தேவையான பணிகள் மேற்கொள்ள JCB இயந்திரம் பயன்படுத்துதல். | 500000 |
| 2 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 16 முதல் 30 வார்டுகளில் பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் தேவையான பணிகள் மேற்கொள்ள JCB இயந்திரம் பயன்படுத்துதல். | 500000 |
| 3 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 மற்றும் 18-ல் சேதமடைந்த சாலைகளை வெட்மிக்ஸ் கொண்டு நிரப்புதல் பணி | 500000 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/E1)

**தீர்மானம் எண்.1008 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.39**

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கீழ்காணும் விவரப்படியான பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கால்நடை மருத்துவமனை அருகில் உள்ள பயன்பாடில்லாத கட்டடத்தினை ABC Centre-ஆக மாற்றுதல் பணி | 1300000 |
| 2 | குன்றத்தூர் நகராட்சி பகுதியில் பழுதடைந்த குடிநீர் வால்வுகள் மற்றும் பைப்லைன் மாற்றுதல் பணி | 900000 |
| 3 | பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறைக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து பைப்லைன் அமைத்தல் பணி | 900000 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/E1)

**தீர்மானம் எண்.1009 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

பொருள் எண்.40

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கீழ்காணும் விவரப்படியான பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 30 வரையிலான வார்டுகளில் விடுபட்ட பகுதிகளில் தெருமின் விளக்குகள் அமைத்தல். | 2000000 |

அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1128/2025/E1)

**தீர்மானம் எண்.1010 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

பொருள் எண்.41

தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்து குறைபாட்டினை போக்கவும் மற்றும் கற்றல் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அரசு மற்றும் நகராட்சி தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை வேளையில் சத்தான உணவு வழங்கும் திட்டம் விரிவாக்கம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு ஒருங்கிணைந்த சமையற்கூடத்திலிருந்து (Common Kitchen) சமைத்து கொண்டு வரப்படும் காலை உணவுகளை பள்ளிக் கூடங்களில் பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு உணவு பரிமாறும் பணிக்கு 100 மாணவர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பணியாளர் சுய உதவிக் குழு, இல்லம் தேடி கல்வி பணியாளர் அல்லது விருப்பம் உள்ள குழந்தைகளின் தாயார் ஆகியோரின் ஒருவர் அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியரின் அனுமதியோடு நியமித்து மாதம் தோறும் ரூ.1500/- மதிப்பூதியம் கல்வி நிதி / பொதுநிதியில் இருந்து வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்துள்ள 4 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 1 நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஒருங்கிணைந்த சமையற்கூடத்திலிருந்து சமைத்து கொண்டு வரப்படும் காலை சிற்றுண்டிகளை பரிமாறுவதற்கு தலைமை ஆசிரியர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 13 பணியாளர்களுக்கு மாத ஊதியமாக தலா ரூ.1500/- வீதம் 12 மாதங்களுக்கு மதிப்பு ஊதியமாக ரூ.234000/-ஐ பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) மேற்படி மதிப்பூதியத் தொகை ரூ.234000/-ஐ பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.972/2023/இ1)

**தீர்மானம் எண்.1011 நாள்.09.01.2026**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**